# ‘மாற்றுத் திறனாளிகள்’ குறித்து - பேச்சின் வேகத்தில் நேர்ந்த பிழை!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் வருத்தம்!



சென்னை, ஏப். 12 -

கழகப் பொதுச்செயலாளர் துரை முருகன் அவர்களின் அறிக்கை வருமாறு: -

இயற்கையிலேயே உடலில் ஏற்பட்ட குறைபாடு உடையவர்களை அருவருக்கும் பெயர் கொண்டு, அவர்களை அழைத்து வந்ததை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கருணை உள்ளத்தோடு "மாற்றுத் திறனாளிகள்" என்று பெயரிட்டு அழைத்தார். அதையே நாங்களும் பின்பற்றி வருகிறோம்.

அப்படிப்பட்ட நானே, ஒரு பொதுக் கூட்டத்தில் பேச்சின் வேகத்தில் மாற்றுத் திறனாளிகளை பழைய பெயரையே கொண்டு உச்சரித்து விட்டேன் என்று கழகத் தலைவர் தளபதி அவர்கள் என் கவனத்திற்கு கொண்டு வந்தபோது, நான் அதிர்ச்சியும் - வருத்தமும் அடைந்தேன். கலைஞரால் வளர்க்கப்பட்ட நானே இப்படிப்பட்ட தவறைச் செய்தது மிகப் பெரிய தவறாகும். மாற்றுத் திறனாளிகள் உள்ளம் புண்பட்டிருக்கும். அதற்காக என் நிபந்தனையற்ற வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் தளபதி அவர்கள், எந்த அளவிற்கு வருந்தியிருப்பார் என்பது எனக்குத் தெரியும். அவருக்கும் என் வருத்தத்தை தெரிவித்து, இனி இத்தகைய நிகழ்வு நிகழாது என்று உறுதி அளிக்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!

# பிரதமர் மோடி எப்போது கவனத்தில் கொள்வார்?

## ராகுல்காந்தி கேள்வி!



புதுடெல்லி, ஏப். 12 -

விளிம்புநிலை சமூக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உறுதி செய்வதில் பிரதமர் மோடி எப்போது கவனத்தை திருப்புவார் என மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் ராகுல்காந்தி பதிவிட்டுள்ளதாவது,

கடந்த 2024ல் பிரதமர் மோடி "வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை" திட்டத்தை மிகுந்த ஆரவாரத்துடன் அறிவித்ததாகவும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க உறுதியளித்ததாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தத் திட்டத்தை அறிவித்து ஒரு ஆண்டு கடந்த நிலையில், பா.ஜ.க. அரசு எதையும் வரையறுக்கவில்லை என்றும், அந்த திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பத்தாயிரம் கோடி ரூபாய் நிதி திருப்பியளிக்கப்பட்டுள்ளதாக ராகுல்காந்தி புகார் கூறியுள்ளார்.

இந்த நிகழ்வு பிரதமர் மோடி வேலையின்மை குறித்து எவ்வளவு தீவிரமாக இருக்கிறார் என்பதை காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். கோடிக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான வழி, MSMEகளில் பெரிய அளவிலான முதலீடு, நியாயமான சந்தைகள் என்றும் ராகுல்காந்தி பதிவிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு மிகவும் தேவைப்படும் கோடிக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான இந்த திட்டம் மற்றொரு பொய்யா என்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

அதானி உள்ளிட்ட கோடீஸ்வர நண்பர்களை வளப்படுத்துவதில் இருந்து விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதி செய்வதில் பிரதமர் மோடி எப்போது கவனத்தை திருப்புவார்?

இவ்வாறு ராகுல்காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

---

# தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு



**கழக சட்டதிட்ட விதி: 17 - பிரிவு: 3-ன்படி கழக கொள்கைப் பரப்புச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் திரு. திருச்சி சிவா, எம்.பி., அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்படுகிறார்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018,
நாள் : 11.04.2025.

**மு.க.ஸ்டாலின்,**
தலைவர்,
தி.மு.க.

---

# தங்க முதலீட்டுப் பத்திரம்: முதல்வர் வழங்கினார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

2021 - 2022 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில், "கடந்த 10 ஆண்டுகளாக திருக்கோயில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களில், திருக்கோயிலுக்குத் தேவைப்படும் இனங்கள் நீங்கலாக, ஏனைய இனங் களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசுக்குச் சொந்தமான தங்க உருக்காலையில் உருக்கி, சொக்கத் தங்கமாக மாற்றி திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் வங்கிகளில் முதலீடு செய்து, அதிலிருந்து பெறப்படும் வட்டி மூலமாக திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளை கண்காணிப்பதற்கு 3 மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஓய்வுபெற்ற மாண்பமை நீதியரசர்கள் தலைமையிலான குழுக்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் தமிழ்நாட்டை சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை என மூன்று மண்டலங்களாக பிரித்து ஓய்வு பெற்ற மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு மற்றும் ஓய்வு பெற்ற மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் க.ரவிச்சந்திர பாபு, செல்வி ஆர்.மாலா ஆகியோர் தலைமையில் தனிக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

அதன்படி, இக்குழுவினரின் கண்காணிப்பில், இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயில், பெரிய பாளையம் பவானியம்மன் திருக்கோயில், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், மாங்காடு காமாட்சியம்மன் திருக்கோயில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருச்செங்கோடு அர்த்த நாரீஸ்வரர் திருக்கோயில், சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானம், இராமநாதபுரம் ஆதிஜெகநாதபெருமாள் திருக்கோயில், இராமநாதபுரம், நாகநாதசுவாமி திருக்கோயில், மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயில், சேலம் சுகவனேஸ்வரர் சுவாமி திருக்கோயில், தாயமங்கலம் முத்து மாரியம்மன் திருக்கோயில், குணசீலம் பிரசன்ன வெங்கடாசலபதி பெருமாள் திருக்கோயில், சேலம் கோட்டை மாரியம்மன் திருக்கோயில், காருவள்ளி பிரசன்ன வெங்கட் ரமணசுவாமி திருக்கோயில், சேலம், கோட்டை அழகிரிநாத சுவாமி திருக்கோயில், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயில், நாமக்கல், நரசிம்மசுவாமிதிருக்கோயில், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் ஆகிய 21 திருக்கோயில்களில் பக்தர்களால் காணிக்கையாக வழங்கப்பட்ட பலமாற்று பொன் இனங்களில் திருக்கோயிலுக்கு பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கி கிடைக்கப்பெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லி கிராம் சுத்தத் தங்கம் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் அந்தந்த திருக்கோயிலின் பெயரில் தங்கக் கட்டிகளாக முதலீடு செய்யப் பட்டுள்ளன.

இதன்மூலம் ஆண்டொன்றிற்கு திருக்கோயில்களுக்கு 17 கோடியே 81 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் வட்டித் தொகையாக கிடைக்கப் பெறுகிறது.

21 திருக்கோயில்களின் பெயரில் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளதற்கு அடையாளமாக திருச்சி மாவட்டம், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், கோவை மாவட்டம், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் அறங்காவலர் குழு தலைவர்கள், இணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர் / செயல் அலுவலர் ஆகியோரிடம் அதற்கான பத்திரங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று வழங்கினார்.

இத்திட்டத்தின் மூலம் திருக்கோயில்களில் பயன்பாட்டில் இல்லாத பலமாற்று பொன் இனங்களை உருக்கி திருக்கோயில்களுக்கு வருவாய் ஈட்டப் பட்டுள்ளதோடு, அதன்மூலம் கிடைக்கப்பெறும் வட்டித் தொகை அந்தந்த திருக்கோயிலின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஓய்வு பெற்ற மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு மற்றும் ஓய்வு பெற்ற மாண்பமை உயர்நீதி மன்ற நீதியரசர்கள் க.ரவிச்சந்திர பாபு, செல்வி ஆர்.மாலா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் ஜோபி ஜோஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### பள்ளிக்கல்வித்துறை மீது முதல்வர் அதிகக் கவனம் செலுத்துகிறார்!

# பள்ளிக் கட்டிட கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிடுங்கள்!

## பெற்றோர் – ஆசிரியர் கழக மாநில பொதுக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தல்!



சென்னை, ஏப். 12-

"உங்கள் பகுதிகளில் நடைபெறும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்குவீர்" என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்ட ரங்கில் தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மாநில பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது: -

"உழுபவர்களுக்கே நிலம் சொந்தம்" என்று உரிமைக் குரலோடு தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பை ஆரம்பித்தவர் முத்தமிழர் கலைஞர் அவர்கள். இன்று இந்தியாவில் "ஆளுநர்களுக்கு அதிகாரம் இல்லை ஆளுபவர்களுக்கே அதிகாரம்" என்ற உரிமையினை பெற்றுத்தந்த தீர்ப்பாக இந்த தீர்ப்பு அமைந்திருக்கிறது. இந்த தீர்ப்பினால் நமக்கு என்ன பயன்? இந்த தீர்ப்பினால் பள்ளிக் கல்வித் துறைக்கு என்ன பயன்? என்று சிந்தித்து பார்க்க வேண்டும். அனைத்து முதலமைச்சர்களும் கொடியேற்றுகின்ற உரிமையை பெற்றுத் தந்தது முத்தமிழர் கலைஞர் என்பதை ஒட்டுமொத்த இந்தியாவே சொல்லும். அதே போன்று அனைத்து மாநிலத்தை சார்ந்திருக்கின்ற முதலமைச்சர்களுக்கும் அவர்களுக்கான உரிமையை பெற்று தந்தவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று வரலாறு சொல்லும்.

தேவையான நேரத்தில் தேவையான தீர்ப்பாக வந்திருக்கின்றது. நமது பிள்ளைகளுக்கு என்ன பாடத்திட்டம் பயன்தரும் என்ற உரிமையினை நாம் பெற்றுள்ளோம். சட்டமன்ற உறுப்பினரான பூண்டி கலைவாணன் சொன்னது போல, நாங்கள் எந்த மனிதர்களுக்கோ எந்த மொழிகளுக்கோ எதிரானவர்கள் அல்ல. எல்லாரும் புரிந்து கொள்ள வேண்டும், எங்கே திணிப்பு என்று வருகிறதோ, அப்பொழுது முதல் ஆளாக குரல் கொடுப்பவர்கள் தமிழினத்தை சார்ந்திருக்கின்ற நாம் தான்.

அதனால்தான் தற்போது ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் ஒவ்வொருவரும் அவர்களுடைய மாநிலம் சார்ந்த உரிமைகளை பேச தொடங்கிருக்கிறார்கள். இது வெறும் அரசியல் சார்ந்த கருத்திற்காக மட்டும் பார்க்கக்கூடாது. தமிழ்நாட்டில் பிறந்திருக்கின்ற நாம் இருமொழி கொள்கையை உயர்த்தி பிடிப்பதற்கு காரணம் உலக வரலாற்றில் நம்முடைய தாய் மொழிக்காக தன்னுடைய இன்னுயிர் நீத்த தியாகிகள் உள்ள மாநிலம் தமிழ்நாடு தான் என்கின்ற பெருமையை நாம் பெற்றிருக்கின்றோம்.

முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூபாய் 7800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு 18000 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகிறது. உங்களுடைய பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுமான பணி நடைபெறும் பகுதிகளுக்கு சென்று அந்த கட்டிடங்கள் எப்படி வேலை நடைபெறுகிறது? சரியாக தான் இருக்கிறதா? சரியாக தான் அந்த வேலையை செய்கிறார்களா? என்று நீங்கள் நேரில் சென்று பார்க்க வேண்டியது உங்கள் கடமை.

பள்ளிக் கல்வித்துறையில் பயிலும் மாணவ - மாணவிகளுக்கு சீருடை வழங்குதல், பள்ளி வகுப்பறை கட்டடம் கட்டுதல், உணவு வழங்குதல் போன்ற பணிகள் சமூக நலத்துறை அமைச்சர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் போன்ற பல்வேறு அமைச்சர்களுடைய பொறுப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, அதற்கான ரிசல்ட்டை நாம் கொடுக்க வேண்டும். இங்கு வருகை தந்திருக்கின்ற உறுப்பினர்களாகிய நீங்கள் உங்கள் பகுதியில் உள்ள பள்ளிகளில் நடைபெறும் பணிகளை நேரில் பார்வையிட்டு பணிகளில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதனை உடனடியாக எனக்கும் பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் வி.முத்துக்குமார் அவர்களுக்கும் தெரியப் படுத்துங்கள்.

பெருந்தலைவர் காமராஜர் காலத்திற்கு பின் அதிகப்படியான வகுப்பறைகளை கட்டியது திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் முதலமைச்சர் காலத்தில் தான். தமிழ்நாட்டில் மொத்தம் 1.25 கோடி மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். அதில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 70 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ - மாணவிகள் பயின்று வருகின்றனர். அதற்காக, ஏறத்தாழ 46,767 கோடி ரூபாய் பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக இந்தியாவில் 75 கோடிக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படிக்கிறார்கள் அதற்கென 78,000 கோடி ரூபாய் மட்டுமே ஒன்றிய அரசால் நிதி ஒதுக்கப்படுகிறது. முதலமைச் சர் எந்த அளவிற்கு கவனம் செலுத்துகிறார் என்பதற்காக இந்த ஒப்பீட்டை நான் சொல்லுகின்றேன்.

நமது பிள்ளைகளை உயர்ந்த இடத்திற்கு கொண்டு வர வேண்டும் என்ற ஆசையின் காரணமாக, வருகை தந்திருக்கின்ற நாம் பொதுக்குழுவில் கூடும் போது உங்கள் கருத்துக்களை எழுதிக் கொடுத்து எல்லோரும் பேசி தீர்வு காணும் விதத்தில் ஆக்கப்பூர்வமான கூட்டமாக நல்ல சமுதாயத்தை உருவாக்கக்கூடிய ஒரு இடமாக அதற்கான கருத்துக்களை பரிமாறி கொள்கின்ற இடமாக இது அமைந்திடவேண்டும்.

ஒன்றிய அரசின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டால் தான் 2152 கோடி ரூபாய் தருவேன் என்பதனை ஏற்று கையெழுத்து போட்டால் தமிழ் சமுதாயத்தை 2000 வருடங்களுக்குப் பின்னோக்கி இழுத்துக்கொண்டு செல்லுகின்ற பாவத்திற்கு நான் ஆளாவேன். ரூபாய் 10000 கோடி கொடுத்தால் கூட எங்களுக்கு அந்த பணம் தேவையில்லை. கொள்கையை விற்று எங்களது நிதியை பெற வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி 2152 கோடி ரூபாயை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் என முதலமைச்சர் அறிவித்தார்கள்.

இந்தியாவில் பள்ளிக்கு செல்லுகின்ற அனைத்து பிள்ளைகளும் நம்முடைய பிள்ளைகள் தான் என்கின்ற அக்கறையின் அடிப்படையில் சொல்கிறேன் தாய்மொழியை சிந்திக்கவும், ஆங்கிலத்தை தொடர்புக்காகவும் கற்றுக் கொள்ளுங்கள் அதுவே போதுமானது. முதலமைச்சர் அதிக கவனத்தை பள்ளிக் கல்வித் துறையின் மீது செலுத்துகிறார். துறையினை மேம்படுத்துவதற்காக இன்னும் அதிகப்படியான திட்டங்களை கொண்டு வர களத்தில் இருக்கின்ற நீங்கள் உங்களுடைய பங்களிப்பினை தொடர்ந்து வழங்கிட வேண்டும் என்று சொல்லி வருகை தந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் இந்த பொதுக்குழுவின் மிகச் சிறப்பான ஏற்பாடு செய்திருக்கின்ற அனைத்து நிர்வாகிகளுக்கும் என்னுடைய நன்றிகள், வாழ்த்துக்கள்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

இப்பொதுக்குழு கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன், சி.வி.எம்.பி. எழிலரசன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தர மோகன், தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் துணைத் தலைவர் வி.முத்துக்குமார், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் மு.பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

## தலைமைக் கழக அறிவிப்பு

**கழக துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி அவர்கள், அவர் வகித்து வரும் துணைப் பொதுச்செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள் : 11.04.2025.

**மு.க.ஸ்டாலின்,**
தலைவர்,
தி.மு.க.

---

### தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட - டிஜிட்டல் இந்தியா

# பொதுச் சேவை மையங்கள் போதுமானதாக உள்ளதா?

## மக்களவையில் - சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெலலி, ஏப். 12 -

தமிழ்நாட்டில் அமைக் கப்பட்டுள்ள டிஜிட்டல் இந்தியா பொதுசேவை மையங்கள் போதுமானதாக உள்ளதா என்றும், இணைப்பினை உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்றும் மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை எழுப்பிய கேள்விகள் வருமாறு: -

(அ) நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் நிறுவப்பட உள்ள ஒரு மாதிரி டிஜிட்டல் இந்தியா பொது சேவை மையத்தின் (DICSC) எண்ணிக்கை குறித்த விவரங்கள்;

(ஆ) இந்த திட்டத்திற்காக பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகை;

(இ) கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் பொது சேவை மையத்தின் (CSC) தற்போதைய அணுகல் மற்றும் டிஜிட்டல் இந்தியா முன்முயற்சியின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுடன் அது எவ்வாறு ஒத்துப் போகிறது;

(ஈ) தமிழ்நாடு மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள பொது சேவை மையங்களின் எண்ணிக்கை மற்றும் செயல்படும் மையங்களின் சதவீதம்;

(இ) நெட்வொர்க் சிக்கல்கள் அதிகமாக உள்ள தொலைதூர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள பொது சேவை மையங்களில் போதுமான இணைய இணைப்பை உறுதி செய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்;

(எஃப்) பொது சேவை மையங்கள் வழங்கும் சேவைகளின் தரத்தை கண்காணித்து மேம்படுத்துவதற்கான வழிமுறைகள்; மற்றும்

(g) கிராமப்புற இந்தியாவில் டிஜிட்டல் பிளவை குறைக்க வும், டிஜிட்டல் சேவைகள் ஒவ்வொரு குடிமகனையும் சென்றடைவதை உறுதி செய்யவும் அரசாங்கம் எடுத்த பிற நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஒன்றிய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் விளக்கமாக பதிலளித்துள்ளார்.